DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.6/2020 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW.1 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : சாந்தி |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2024

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் கல்வடங்கம் அருகில் மேட்டாங்காட்டில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். இறந்து போன சாட்சி மதிவாணன் என் கணவர். அவர் இறந்து சுமார் 11 ஆண்டுகள் இருக்கும். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இன்று மனுவின் பேரில் ஆஜர் ஆகவில்லை என்பதால் சாட்சியால் அடையாளம் காட்ட இயலவில்லை. நானும் என் கணவரும் விவசாயம் செய்து வந்த போது எங்கள் குடும்ப தேவைக்காக 2 ம் எதிரி முருகேசனிடம் ரூ.3 லட்சம் கடன் கேட்டோம். அந்த கடனுக்கு ஆதரவாக 30 மாதம் கெடு வைத்து ஆவணம் எழுதி தரவேண்டும் என்று கேட்டார். அதன் படி என் கணவரும் என் மாமியார், கொளுந்தனார், மகன் ஆகியோர் சேர்ந்து கடனுக்கு ஆதரவாக ஒரு ஆவணம் எழுதி கொடுத்தார்கள். அதன் பின்பு நாங்கள் வாங்கிய கடனை 30 மாதம் முடிவதற்கு 3 மாதம் முன்பே திருப்பி செலுத்துவதற்காக சென்ற போது 2 ம் எதிரி அந்த பணத்தை

வாங்கி கொள்ள மறுத்துவிட்டார். அப்போது நான் பணத்திற்காக ஆவணம் எழுதி வாங்கவில்லை என்றும் சொத்திற்காக தான் எழுதி வாங்கியதாக சொன்னார். பின்பு 2 நாட்கள் கழித்து சுமார் 30 ஆட்களுடன் 2ம் எதிரி சுமார் காலை 9.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்து நாங்கள் வாடகைக்கு விட்டிருந்த 6 கடைகளை காலி செய்யுமாறு வாடகைதாரர்களை மிரட்டினார்கள். ஆனால் வாடகைதாரர்கள் காலி செய்ய மறுத்துவிட்டார்கள். ஆனால் 2ம் எதிரியும் அவருடன் வந்தவர்களும் கடைக்குள் இருந்த பொருட்கள் அனைத்தையும் எடுத்து வெளியே வைத்துவிட்டார்கள். பின்பு மதியம் சுமார் 2.00 மணிக்கு JCB வாகனம் வைத்து கடை கட்டிடம் முழுவதையும் இடித்து தரைமட்டம் ஆகிவிட்டார்கள். அப்போது அங்கு நானும் என் கணவரும் என் மாமியாரும் இருந்தோம். நாங்கள் முருகேசனையும் அவருடன் வந்தவர்களையும் இடிக்க கூடாது என்று தடுத்தோம். அப்போது முருகேசனுடன் வந்தவர்கள் குடிபோதையில் இருந்தார்கள். அப்போது முருகேசன் என்னை உனக்கு என்னடி சொத்து வேண்டும் நாங்கள் எழுதி வாங்கி கொண்டோம் என்றும் கெட்ட வார்த்தையால் அசிங்கமாக திட்டினார். அப்போது முருகேசன் என்னை காலால் உதைத்தார். கோபால் என்னை கட்டையால் முதுகில் அடித்தார். அதனால் எனக்கு முதுகில் வீக்க காயம் ஆனது. அதற்கு நான் சேலம் விஜயலட்சுமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதனால் நாங்கள் பயந்து கொண்டு தேவூர் காவல் நிலையம் சென்றோம். அங்கு நாங்கள் சொன்ன விவரத்தை போலீசார் எழுதி கொண்டார்கள். அதன் பின்பு நானும் என் கணவரும் சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்றோம். அங்கு நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தோம். பின்பு நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் வாங்கி பார்த்த போது நாங்கள் 2ம் எதிரியிடம் கடன் வாங்கிய தேதியிலேயே 2ம் எதிரி, கோபால் மற்றும் தங்கவேல் ஆகியோர் பெயரில் கிரையம் எழுதி வாங்கியிருந்தது தெரியவந்தது. இது சம்பந்தமாக போலீசார் சம்பவம் இடம் வந்து பார்வையிட்டு விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சாந்தி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.